1973 நவம்பர் 23]

கடலூர் சிறையிலிருந்து தப்பிய கைதிகள்

*346 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1973 ஆகஸ்ட் மாதத்தில் கடலூர் சிறையிலிருந்து கைதிகள் எவரேனும் தப்பி ஓடி விட்டனரா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) 31—7—1973 அன்று அதிகாலை 3-10-லிருந்து 3-45 மணிக்குள் கலியன், வடிவேல் அம்பலம், சக்கரபாணி, முத்துசாமி ஆசாரி ஆகிய நான்கு விசாரணைக் கைதிகள் கடலூர் கிளைச் சிறையிலிருந்து தப்பி ஓடி விட்டனர். இந்நால்வரில் வடிவேல் அம்பலம், முத்துசாமி ஆசாரி என்பவர்கள் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளனர். மற்ற இரு கைதிகளை பிடிப்பதற்கு தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: கிளைச் சிறையிலிருந்து கைதிகள் தப்பி செல்வது அடிக்கடி காணப்படுகிறது. ஆகவே, அவர்களுடைய கண்காணிப்பை அதிகப்படுத்த, அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இது சப்-ஜெயில், கிளை சிறைச் சாலை. இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறும்பொழுது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று காவல் துறையினர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றனர்.

Fishermen of Kanyakumari.

*347 *Q.*—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether a large number of fishermen families have suffered famine conditions due to lack of fish catch at Kanyakumari in April 1973;

(*b*) if so, the total number of families affected thereby; and

(*c*) the assistance given by the Government to them?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) 18,713 குடும்பங்கள்.

(உ) 17—4—1973 முதல் 12—5—1973 வரையிலான நான்கு வார காலத்துக்கு அரிசியும் மரவள்ளிக்கிழங்கும் இலவசமாக வழங்கியதன் மூலம் அரசு ரூ. 3,33,852 உதவி வழங்கியது.

திரு. என். டென்னிஸ் : அவர்களுக்கு பஞ்ச காலம் தீரும் வரையில் நிவாரணம் கொடுக்கவில்லை. இம்மாதிரி பஞ்சம் இருக்கும் காலத்தில், பஞ்சம் தீருகின்ற வரையில் நிவாரணம் அளிப்பதற்கான திட்டங்களை அரசு வகுத்து செயல்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய சிபார்சின் பேரில் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் சொன்ன பிரகாரம் உதவி வழங்கப்படுகிறது. அவ்வப்பொழுது நிலைமையைப் பொறுத்துத்தான் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. க. உரொ. எட்மண்ட் : இப்பேர்ப்பட்ட பஞ்ச நிவாரணங்கள் அளிக்கும்பொழுது மாவட்ட ஆட்சித் தலைவர் ஆலோசனை கேட்டு செய்வதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் ஆலோசனையைக் கேட்டு செய்வதைவிட, மாவட்டத்தில் இருக்கிற மாநில மீனவர்கள் ஆலோசனைக் குழுவில் உள்ள உறுப்பினர்களைக் கலந்து செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாவட்ட ஆட்சித் தலைவர் மீன்வள இயக்குநரைக் கலந்துதான் முடிவு எடுப்பார். அப்படி மாவட்ட ஆட்சித் தலைவர் அறிக்கை அனுப்பும்பொழுது சம்பந்தப்பட்ட அனைவரையும் விசாரித்து, கலந்துகொண்டுதான் அறிக்கை அனுப்புகிறார். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் கருத்து மனதில் கொள்ளப்படும்.

Persons affected by fire accident near Nehru Park.

* 348 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether a large number of huts were gutted near Nehru Park at Kilpauk, Madras, about 10th February 1973; and

(*b*) if so, the details thereof?